செ. வெ. எண்: 284

நாள்: 04.06.2009

# பத்திரிகைச் செய்தி

பள்ளிக்கல்வித் துறை – இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு கலந்தாய்வு – செய்தி வெளியிடக் கோருதல்.

-----

தொகுப்பூதியப் பணியாளர்களுக்கென தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி IV பணிக்கான சிறப்புத் தேர்வில் தேர்வு செய்யப்பட்டு பள்ளிக்கல்வித் துறைக்கு தேர்வாணையம் ஒதுக்கீடு செய்துள்ள நபர்களுக்கு பள்ளிக்கல்வித் துறையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழுள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் நியமனம் வழங்கும் பொருட்டு 09.06.2009 அன்று காலை 10.00 மணி முதல் வரிசை எண்.1 முதல் 200 வரை மற்றும் பிற்பகல் 2.00 மணி முதல் வரிசை எண்.201 முதல் 415 வரை கீழ்க்கண்ட இடத்தில் கலந்தாய்வு நடைபெறவுள்ளது.

## புனித ரஃபேல் பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
## எண்.2, ரோசரி சர்ச் ரோடு, சாந்தோம், சென்னை– 4.

தேர்வாணையத்தால் பள்ளிக்கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நபர்களின் பெயர்ப்பட்டியல் 'www.pallikalvi.in' என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நபர்கள் தேர்வாணையத்திலிருந்து பெறப்பட்ட அறிவிப்புக் கடிதம் / தேர்வு நுழைவுச் சீட்டினை (Hall Ticket) கலந்தாய்வின் போது எடுத்து வர வேண்டும். சம்பந்தப்பட்ட அனைத்து நபர்களும் கலந்தாய்வில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பள்ளிக்கல்வி இயக்குநர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9